Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE,<br>KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | Case No.**S.C. 08/2020** |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution அசா. 4<br><br>Defense<br>Court |
| Name | பழனியம்மாள் |
| Husband Name | காளியப்பன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.12.2021.** | |

முதல் விசாரணை

நான் எட்டமநாய்க்கன்பட்டியில் வசித்துவருகிறேன். எதிரி மோகனை எனக்குதெரியும். அவர் எனது தம்பியின் உடன்பிறந்த தம்பி ஆவார். 19.05.2019 அன்று இரவு 9.30 மணியளவில் எதிரி மோகன் எனது கொளுந்தன் செந்தில் வீட்டின் முன்பு கட்டிலில் படுத்திருந்த அவரது நண்பரான செந்திலை எதிரி அறுவாளால் வெட்டினார். எனது வீட்டின் வெளியே இருந்த நான் அதைப்பார்த்தேன். எதிரி மோகன் அறுவாளால் செந்திலின் இடது காதில் பின்பக்கம் வெட்டினார். இடது முன்னங்கையின் பின்பக்கம் அறுவாளால் வெட்டினார். வலது கை பெருவிரலில் அறுவாளால் வெட்டியதில் செந்திலின் பெருவிரல் துண்டானது. செந்திலின் இடதுபக்க முதுகில் எதிரி அறுவாளால் வெட்டினார். அதன்பிறகு 108 ஆம்புலன்ஸில் எதிரியை மணப்பாறை அரசுமருத்துவமனைக்கு

சிகிச்சைக்கு அழைத்துச்சென்றார்கள். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

ஒம்/பழனியம்மாள்

ஒம்/M.சண்முககனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.